**உங்கள் உரிமை மற்றும் உங்கள் ஆரோக்கியம்**

**கியூபிக் உரிமை ஆவணத்தில் தனியொரு மனிதரின் உரிமைகள் மற்றும் சுதந்திர நிலையில்** அனைத்து மனிதர்களும் சம்மானவர்கள் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தில் சம உரிமைகளும் உள்ளது.

இவ்வாறு உரிமை ஆவணத்தின் **கட்டுரை 10** இல், *«வேற்றுமை உணர்வைத் தடைசெய்தல் அல்லது அச்சுறுத்தல்கள் அடிப்படையில் இனம், தோல்நிறம், பாலினம், கர்ப்பம், பாலியல் நடத்தை, உரிமையியல் நிலை, வயது, ( சட்டத்தால் விவரிக்கப்பட்டதைத் தவிர்த்து), மதம், அரசியல் குற்றத்தீர்ப்பு, மொழி, இன அல்லது தேசியத் தோற்றம், ஊனமுற்றோர் அல்லது உடல் ஊனமுற்றோர்க்கு ஏதேனும் வகையில் இழப்பீடாக உதவுதல் ».*

**உடல்நல சேவைகள் மற்றும் சமூக சேவைகள் சட்டத்தின்படி,** வாடிக்கையாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் பின்வருமாரு:

- **அறிவிக்கப்பட்ட உரிமைகளான** அதாவது கிடைக்ககூடிய சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் மற்றும் வளங்கள்.
- **போதுமான மற்றும் தொடர்ந்த சேவைகளின் உரிமைகள்** அதாவது அறிவியல் சார்ந்த, கருணைமிக்க, உரிமையியல் மற்றும் எளிமையான நடத்தை, பாதுகாப்பான முறையில் நிறுவல் மற்றும் இருக்ககூடிய வளங்களுடன் இணக்கமானது.
- **தேர்ந்தெடுக்கும் உரிமை அதாவது நிறுவனத்தின் நோக்கத்தை மற்றும்** இருக்ககூடிய வளங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு சேவைகளை வழங்கும் தொழில் நெறிஞர் மற்றும் முகவர் நிலையைத் தேர்ந்தெடுப்பது
- **அவசர உதவி சேவையை பெறுவதற்கான உரிமை,** யாரேனும் ஒருவரது வாழ்க்கை அல்லது ஒருமைப்பாடு ஆபத்தில் இருக்கும்பொழுது, அவரது நிலைக்கு தேவைப்படும் கவனிப்பை பெறுவதற்கான உரிமை உள்ளது.
- **அறிவித்தலுக்கான உரிமை** அதாவது ஒருவரின் உடல்நிலைமை மற்றும் சிகிச்சைக்கான தேர்வுகள், அபாயங்கள் மற்றும் பின்விளைவுகளை சிகிச்சையைப் பெறுவதற்கு முன்பே ஒத்துக்கொள்வது மற்றும் சிகிச்சையின் பொழுது ஒருவரின் உடல்நலத்தை அல்லது சேமத்தை பாதிக்கும் வகையில், ஏதேனும் விபத்தால் உண்டாகும் விளைவுகளை, முடிந்தவரை கூடிய விரைவிலேயே அரிவிப்பதற்கான உரிமைகள் ஆகும்.
- **போதுமான இடவசதிக்கான உரிமை** ஒருவரின் நிலைமைக்கு தகுந்தாற் போல்;
- **இழப்பீட்டை நாடுவதற்கான உரிமை**, ஏதேனும் தொழில் அல்லது தவறான மருத்துவ சிகிச்சைக்காக நாடுவது.
- **முறையீட்டைக் கோப்பாக்குவதற்கான உரிமை**, அலுவலக முறையீட்டை செயல்படுத்துவதற்கான வரம்புறுகு
- **ஒப்புதலுக்கான உரிமை**, இரத்தப்பரிசோதனையில் இருந்து உறுப்பு தானம் வரை எந்த ஒரு சிகிச்சையை எடுத்துக்கொண்டிருந்தாலும், ஒப்புதலை ஏற்றுக்கொள்வதற்கும், அல்லது நிராகத்தலுக்கான உரிமை. ஒப்புதலானது, பிரகடனப்படுத்தியும், அறிவித்தும் மற்றும் வற்புறுத்தல் இன்றியும் இருப்பது அவசியம் ஆகும்.
- **பங்கேற்பதற்கான உரிமை** அதாவது ஒருவரின் உடல்நலம் அல்லது சேமத்தை பாதிக்கூடிய வகையில் உள்ள ஏதேனும் ஒரு தீர்மானத்தில்.
- **இணை சேர்க்க மற்றும் ஆதரிப்பதற்கான உரிமை**, அதாவது விபரங்களைப் பெறுவதற்கு அல்லது வழங்கப்பட வேண்டிய சேவைகளைப் பற்றிய தீர்மானங்கள எடுக்க வாடிக்கையாளருக்கு உதவுவது
- **எடுத்துரைப்பதற்கான உரிமை**, அதாவது பருவமடையாதவர் அல்லது தகுதியற்ற வயது முதிர்ந்தோர் ஆக இருக்கும் பட்சத்தில்
- **அணுகுவதற்கான உரிமை**, ஒருவரின் மருத்துவக் கோப்பு மற்றும் இரகசியமாக தேவைப்படும் பட்சத்தில்.
- **ஆங்கிலத்தில் சேவையைப் பெறுவதற்கான உரிமை**, அதாவது ஏஜென்சி அல்லது நிகழ்ச்சி நிரலிடம் தேவையான வழங்குதல் இருக்கும் பொழுது

உடல்நலச் சேவைகள் மற்றும் சமூகச் சேவைகள் சட்டம் நிறுவுவது என்னவென்றால், மனித,பொருள், மற்றும் நிதி வள நிறுவன அமைப்புகளைச் சுட்டிக் காட்டுவது.

- அனைத்து பகுதிகளின் புவியியல், மொழியியல், சமூக கலாசாரம், இனக் கலாச்சாரம் மற்றும் சமூக பொருளாதாரப் பண்புகளை கணக்கில் எடுத்துக் கொள்வது. **(கட்டுரை2.5).**
- சலுகை,வளங்களைச் சார்ந்து பல்வேறு இனக்கலாச்சார சமூகத்தைச் சார்ந்த நபர்கள், அவர்கள் மொழியில் உடல்நலச் சேவைகள் மற்றும் சமூகச் சேவைகள் பெறுவதற்கான தன்மை**(கட்டுரை 2.7).**

**முறையீட்டைக் கோப்பாக்க**

உங்கள் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை என நீங்கள் கருதினால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டியது.

- குறிப்பிட்ட சுகாதாரக் கவனிப்பு முறையீட்டு ஆணையாளர்;
- மாண்ட்ரீல் தீவின் முறையீட்டு உதவி மற்றும் இணைப்ப் மையம்(CAAP-Île de Montréal) 514-861-5998;
- ஏதேனும் மனிதஉரிமையை ஆதரிக்கும் அமைப்பு

**உடல்நலக் காப்பீடு மற்றும் குடிபெயர்ந்தவர்களின் நிலை**

**அனைத்து இடம்பெயர்ந்தவர்களும்** (சான்றழிக்கப்பட்ட தொழிலாளிகள் , பொறுப்பேற்ற உறவினர்கள்.) கியூபெக்ஸ் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்படுவதற்கு, மூன்று மாதங்கள் காப்பீடில்லாக் காத்திருக்கும் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். அப்படியென்றால், அந்தக் காலத்தின்பொழுது இலவச சுகாதார மையச் சேவைகள் மற்றும் சிகிச்சைகள் பெற அவர்களுக்கு உரிமை இல்லை.. இருப்பினும், இந்தக் காப்பிடில்லா திட்டத்தில் பின்வரும் சில நிலைகள் விதிவிலக்கானது: பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிரசவத்திற்கு பின் மற்றும் வழக்கனமான பரிசோதனை; பாதிக்கப்பட்ட தம்பதியர்களின் சேவை அல்லது குடும்ப வன்முறை அல்லது பாலினக் கொடுமை, பொது சுகாதாரம் மற்றும் பொது சுகாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் தொற்றுநோய்கள். கியூபெக்ஸ் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு காப்பீடில்லா திட்டத்தில் உட்படுத்தப்படும் நபர்கள், இந்தக் காலகட்டத்தில் அவர்கள் பெறும் அனைத்து உடல்நல சேவைகளுக்கும் பணம் செலுத்த வேண்டியது கட்டாயமாகும் அல்லது கனடாவில் வந்து இறங்கிய 5 நாட்களிற்குள் அவர்கள் ஏதேனும் தனியார் காப்பீட்டுத் திட்டத்திற்கு பதிவு செய்திருக்க வேண்டும்.

அகதிகள் (சர்ட்டிஃபிகேட். டி செலக்ஷன் ட்யூ கியூபெக் வைத்திருக்கும் நபர்கள் மற்றும் கனடாவால் பாரம்பரிய

அகதிகள் என்று தீர்மானிக்கப்பட்டதற்கான நிரூபனம் வைத்திருப்பவர்கள்) மூன்று மாதகால காப்பீடில்லா திட்டத்திற்க்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். இருப்பினும், RAMQ விடம் இருந்து அவர்கள் காப்புறுதி பெறும் வரை உரிமை கோரும் அகதிகளின் காப்புறுதி இண்டரீம் ஃபெடரல் ஹெல்த் ப்ரோகிராமால் செயல்முறைப்படுத்தப்படும்.

கியூபெக்கில் அனைவரும் மருந்து காப்பீட்டு திட்டத்தை வைத்திருக்க வேண்டும் இது கியூபெக்ஸ் உடல்நலக் காப்பீடு திட்டத்தால் (RAMQ அல்லது ஏதேனும் தனியார் திட்டத்தால் வழங்கப்படலாம். (உங்கள் வேலைவாய்ப்பில் இணைக்கப்பட்ட) நீங்கள் தனியார் காப்பீட்டு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தால், (514) 864-3411 என்ற எண்ணிற்கு அழைத்து RAMQ திட்டத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம். இது கட்டாயமானதாகும் மற்றும் உங்களது பொறுப்பாகும்.

**தி CSSS**

CSSS (அல்லது உடல்நல மற்றும் சமூக சேவைகள் மையம்) **என்பது ஒரு பொது நிறுவனம் ஆகும், இது** CLSC(அல்லது உள்ளூர் சமூக சேவைகள் மையம்), பொது மருத்துவமனை மற்றும் CHSLD (அல்லது நீண்டகால குடியிருப்பு சுகாதார மையம்) இவை அனைத்தும் ஒரே பகுதியில் உள்ளடங்கி செயல்படுவது.

CLSC இன் நோக்கமானது சுகாதாரச் சேவைகள் மற்றும் சமூக சேவைகளை வழங்குவது, அதாவது நோய் தீர்க்கும் மற்றும் நோய் காக்கும் என இரண்டும் ஆகும். இது பல்வேறு விதமான சேவைகளை வழங்குகிறது, அதாவது மருத்துவ ஆலோசனை, செவிலி கவனிப்பு, உணவுமுறை வல்லுநர் ஆலோசனை, அதிகரித்துக் கொண்டிருக்கும் சார்ந்திருக்கும் நபர்களுக்கான வீட்டுக் கவனிப்பு சேவைகள், HIV-எயிட்ஸ், STI யைக் கண்டுபிடித்தல், தடுப்பு மருந்துகள், மற்றும் இரத்தப் பரிசோதனைகள், பிரசவக் காலத்திற்கு முந்தைய நிகழ்ச்சிகள், மனநலம் மற்றும் போதை மறுவாழ்வு ஆலோசனைகள், அதைப்போல.

**மருத்துவரை ஆலோசிக்க**

கியூபெக் தற்போது மருத்துவரின்மையை அனுபவித்து வருகிறது, அதனால் சில சமயங்களில் CLSC இல் மருத்துவரை ஆலோசிப்பது அல்லது குடும்ப மருத்துவரை பெறுவது கடினமாகிறது. சிகிச்சைகளைப் பெற, நீங்கள் வாக்-இன் கிளினிக்குகளின் (உங்களது CLSC இன் கோப்பகத்தை நீங்கள் ஆலோசிக்கலாம்.) வேலை நேரங்களை முன்கூட்டியே தொலைபேசி மூலம் கேட்டு அறிந்து கொண்டு செல்லாம். திரும்பவும் அதே கிளிக்கிற்கு செல்வது எப்பொழுதுமே சிறந்ததாகும், ஏனென்றால் உங்களது மருத்துவ வரலாற்றை அவர்கள் சிறந்த முறையில் அறிந்திருப்பார்கள்.

**ஒரு நிபுணரை ஆலோசிக்க**

கியூபிக்கில், நிபுணரை ஆலோசிக்க, (தோல் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், சிறுநீரக மருத்துவர், எலும்பு சிகிச்சை மருத்துவர், கண் மருத்துவர்) நீங்கள் ஒரு பொது மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டிருக்கவேண்டும் (குடும்ப மருத்துவர் அல்லது வாக்-இன் கிளினிக்கில் ஆலோசனைப் பெற்ற மருத்துவர்)

**உங்களது தாய்மொழியில் உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவையா ?**

ஃபிரெஞ்ச் அல்லது ஆங்கிலம் புரிந்து கொள்ள சிரமப்படும் நபர்கள் ஒரு மொழிபெர்ப்பாளரின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். அதைச் செய்வதற்கு அவரோ அல்லது அவளோ முதலில் சுகாதார மையத்திற்குச் செல்லவேண்டும், (CLSC, மருத்துவமனை, நர்சிங் ஹோம், கிளினிக், அதைப் போன்று.)அவர்கள் தேவையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மொழிபெயர்ப்பாளர் சேவை தரவேண்டிய இடத்திற்குச் சென்றோ அல்லது தொலைபேசி மூலமாகவோ மொழிபெயர்ப்பு செய்யலாம்.

8 1 1 APPELEZ INFO-SANTÉ

**இண்ஃபோ – சேண்டே**

உங்கள் ஆரோக்கியத்தைப் பற்றியோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரின் ஆரோக்கியத்தைப் பற்றியோ உங்களது கேள்விகளுக்கு நீங்கள் 8-1-1என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு செவிலியிடம் (நர்ஸ்) ஆலோசனையைப் பெறலாம். செவிலி உங்களது நிலைமையை மதிப்பிட்டு, உங்களுக்கு ஆலோசனையை வழங்குவார் மற்றும்/அல்லது சரியான ஏஜென்சியிடம் செல்ல வழிநடத்துவார். (மருத்துவமனை அல்லது மருத்துவமனை ஆவசர சிகிச்சைப் பிரிவு)

**விஷத் தடுப்பு மையம்**

CENTRE ANTIPOISON DU QUÉBEC 1 800 463-5060

இந்த சேவையில், ஏதேனும் நஞ்சேற்றம் அவசர நிலைமைகளில் பயன்படுத்தலாம். இந்த சேவை இலவசமானது மற்றும் ஒருநாளின் 24 மணிநேரமும் கிடைக்ககூடியது ஆகும். இந்த சேவையைப பெற 1 800 463-5060.என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

# சாண்டே-ஆ சேஞ்-ஆ!

**கியூபெக்கின் சுகாதார சேவைகள்**

(2010 பதிப்பு)





அணுகுதல்

**Version en tamil**

இந்த சிறுகையேடானது நீண்ட தகவல்கள் கொண்ட கூட்டத்தொடரின் இலவச இணைப்பாகும்.
மினிஸ்ட்ரி டி லா சாண்டே எட் டெஸ் சர்வீசஸ் சோஷியாக்சிற்கு நன்றி. ஏனென்றால் அவர்களின் அனுமதியால் தான் இந்த சிறுகையேட்டின் மொழிபெயர்ப்பு சாத்தியமானது.